1968 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஏதாவது பர்மிட் கொடுக்கப்பட்டிருந்தால், அது, ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஆல்ட்டர்நெடிவ் ரூட் நிலைக்கேற்ப கொடுக்கப்பட்டிருக்கலாம். இம்மாதிரியான நிகழ்ச்சி இன்ன இடத்தில் நடந்தது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எழுதியனுப்பினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலிருந்து கோவைக்குப் போகும் ஏ.பி.டி. பஸ் கட்டணமானது கிணத்துக்கடவுக்கும் கோயம்பத்தூருக்கும், பொள்ளாச்சிக்கும் கிணத்துக்கடவுக்கும் ஓடுகின்ற டவுன் பஸ்ஸுக்கு ஆகும் கட்டணத்தை விட அதிகமாக இருக்கிறது என்பது தெரியுமா? அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது பற்றி கவனிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து தஞ்சைக்கு நேரடியாக ரயில் மூலமாக அல்லது பஸ் மூலமாக போக்குவரத்து வசதி இல்லாததால், ஈரோட்டிலிருந்து தஞ்சைக்கு நேரடியாக துரித பஸ் வண்டிகளை விட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது பற்றி எழுதியனுப்பினால், துரித பஸ் விடுவதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திருத்துறைப்பூண்டி தொகுதியில் வடிகால் வசதி

* 51 வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

திருத்துறைப்பூண்டி தொகுதியில் எடையூர், அம்மனூர், அனுமந்தக் கோட்டகம், மூவரசங் கோட்டகம், உதயமார்த்தாண்டபுரம், நாச்சிக்குளம், பல்லியமேடு, ஆகிய கிராமங்களில் வடிகால் வசதியில்லாமல் சுமார் 7,000 ஏக்கர் நஞ்சை நிலம் சாகுபடி காலங்களிலும் அறுவடை நேரங்களிலும் பெரும்பாலான வேளைகளில் தண்ணீரில் மூழ்கிவிடுவதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இடையூர், அம்மனூர் முதலிய கிராமங்களில், தாழ்ந்த பகுதியிலுள்ள நிலங்கள், மாரிக்காலங்களில் நீரில் மூழ்கிவிடும் நிலையில் இருந்து வருகின்றன. இதற்கான வடிகால் வசதி அமைப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. ஆய்வு வேலை முடிவுற்றபின் செயல்படுத்துவதற்கேற்ற திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

திரு. ந. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கடந்த இருபதாண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்கள் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் வாயிலாகவும், அமைச்சர் அவர்களை நேரில் அழைத்து

வந்து காட்டியும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஒரு அதிகாரியை நியமித்து தக்க நிவாரண வேலையைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக 'ஸ்பெஷல் டிரைனேஜ் ஸ்கீம், தஞ்சாவூர்' என்ற ஒரு ஸ்கீம் அமைக்கப்பட்டிருக்கிறது. 64 வடிகால் திட்ட வசதிகளை ஆய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்று 1—9—1967-ல் அந்த அமைப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆய்வு வேலை முடிந்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு அதற்கான வேலைகள் நடக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே பொதுவாக மழை பெய்தால் நீர் வடிய வடிகால் வசதியில்லை. சென்ற காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. ராமய்யா அவர்களை நேரில் அழைத்து வந்து காட்டியதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். முன்பிருந்த அரசாங்கம் இதுபற்றி ஏதாவது பரிசீலனை செய்ததா? அல்லது இப்போதுதுள்ள அரசு வந்தபிறகுதான் இதுபற்றி பரிசீலனை நடந்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஸ்பெஷல் டிரைனேஜ் ஸ்கீம், தஞ்சாவூர், என்ற பெயரில் ஒரு ஸ்கீம் அமைக்கப்பட்டது. சென்ற அரசு இருந்தபோதே இதுபற்றி பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டன. 1—9—1967-ல் வடிகால் திட்ட வசதிகளைக் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு வேலை 31—8—1968-க்குள் முடிந்து விடும். அதன்பின்னர் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, அடுத்த சாகுபடி காலத்திற்குள் இந்தத் திட்டத்தை முடித்துவிடுவார்களா ? அதற்கான வேலைகளைத் துரிதமாகச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 31—8—1968-க்குள் இந்த ஆய்வுவேலை முடிவுறும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, இந்த டிரைனேஜ் ஸ்கீம் சம்பந்தமாக கடந்தகால அரசு பரிசீலனை செய்து, கைவிடப்பட்டு விட்டதா? கும்பகோணம், மாயவரம் போன்ற இடங்களில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் பேசும்போது அமைச்சர் அவர்கள் போதுமான நிதிவசதி இல்லையென்று குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்படி திட்டத்தைத் தீட்டுவதற்கு முன் போதுமான நிதி வசதியிருக்கிறதா? என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படியிருந்தால் எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1968 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வடிகால் வசதி திட்டங்கள் கைவிடப்பட்டதாக எப்போதும் அறிவிக்கப்படவில்லை. ஆங்காங்கு நடக்கும் மெயின்டனன்ஸ் செலவுகளிலேயே இதை முடித்து விடலாம். இந்த 64 வடிகால் திட்டங்களைப்பற்றி ஆய்வுக்குழு என்ன திட்டம் சமர்ப்பிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா 52. திரு. என் காசிராமன் அவர்களுடைய வினாவை, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேட்பார்கள்.

Damages due to fire in Vedaranyam taluk

* 52 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that quite a number of houses have been affected by fire in Vedaranyam taluk;

(*b*) if so, the reasons therefor;

(*c*) the extent of damages caused; and

(*d*) whether the Government have any immediate proposals to construct fire-proof houses for those who have been affected by the said fire?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம். வேதாரணியத்தில் 8—8—1967 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் ஓடுவேய்ந்த 14 வீடுகளும், 106 கூரை வீடுகளும் அழிந்து விட்டன.

(இ) அடுப்பிலிருந்து பறந்த தீப்பொறிகளினால் இது எதிர்பாராதவிதமாக ஏற்பட்டது.

(உ) தீயினால் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 5,49,705 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று சொல்ல அமைச்சர் முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 30 ரூபாயும், துணிமணிகளுக்காக 10 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் முதலிலே கொடுக்கப்பட்டு வந்தது. புது அரசு வந்ததற்குப் பிறகு 1—7—1967 லிருந்து, வீடுகள் புதுப்பித்துக்கொள்ள 30 ரூபாய் என்றிருந்ததை 60 ரூபாயாகவும், துணிமணிகளுக்காக 10 ரூபாய் என்றிருந்ததை 20 ரூபாயாகவும் மொத்தம் 80 ரூபாயாக உயர்த்தி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தவகையில் 118 குடும்பங்களுக்காக 9,440 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல்,